தினத்தந்தி

16 JAN 2025

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல்:

# வேட்புமனு தாக்கல் செய்ய நாளை கடைசி நாள்

ஈரோடு, ஜன.16-
ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்ய நாளை கடைசி நாள் ஆகும்.

## இடைத்தேர்தல்

ஈரோடு கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ.வாக இருந்த ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் உடல் நலக்குறைவால் கடந்த மாதம் 14-ந்தேதி சென்னையில் காலமானார். இதனால் ஈரோடு கிழக்கு தொகுதி காலியானது. இதைத் தொடர்ந்து இந்திய தேர்தல் ஆணையம், ஈரோடு கிழக்கு தொகுதியில் அடுத்த மாதம் (பிப்ரவரி) 5-ந்தேதி இடைத் தேர்தல் நடைபெறும் என்று கடந்த 7-ந்தேதி அறிவித்தது.

அன்று முதல் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளது. கடந்த 10-ந்தேதி வேட்புமனு தாக்கல் தொடங்கியது. அன்று 3 சுயேச்சை வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல் செய்தனர். 11 மற்றும் 12-ந் தேதி விடுமுறை தினமாகும். அதைத்தொடர்ந்து 13-ந்தேதி நடந்த வேட்புமனு தாக்கலின்போது 6 பேர் ஈரோடு கிழக்கு தொகுதியில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்தனர்.

## நாளை கடைசி நாள்

பொங்கல் பண்டிகையையொட்டி நேற்று முன்தினம் முதல் இன்று (வியாழக்கிழமை) வரை தொடர்ந்து 3 நாட்கள் விடுமுறை ஆகும். இதனால் ஈரோடு கிழ்க்கு தொகுதியில் போட்டியிட நாளை (வெள்ளிக்கிழமை) கடைசி நாள் ஆகும். போட்டியிட விரும்பும் வேட்பாளர்கள் நாளை பகல் 11 மணியில் இருந்து பிற்பகல் 3 மணிக்குள் வேட்புமனு தாக்கல் செய்ய வேண்டும்.

நாளை கடைசி நாள் என்பதால் தி.மு.க. வேட்பாளர் மற்றும் நாம் தமிழர் கட்சி வேட்பாளர் வேட்புமனு தாக்கல் செய்வார்கள். மேலும் சுயேச்சை வேட்பாளர்களும் மனு தாக்கல் செய்ய வாய்ப்பு உள்ளது. நாளை மறுநாள் (சனிக்கிழமை) வேட்புமனுக்கள் பரிசீல்னை செய்யப்படுகிறது. வேட்புமனுக்களை வாபஸ் பெற வருகிற 20-ந்தேதி கடைசி நாள் ஆகும். அன்று மாலை இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படுகிறது. அடுத்த மாதம் (பிப்ரவரி) 5-ந்தேதி வாக்குப்பதிவு நடைபெறுகிறது. 8-ந்தேதி வாக்குகள் எண்ணப்படுகின்றன.

Tomorrow is the last day for filing nomination in Erode East Assembly Constituency.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 16 JAN 2025

ஈரோடு கிழக்கு தொகுதியில்

# 9 வாக்குச்சாவடிகள் பதற்றமானவை

ஈரோடு, ஜன.16-

ஈரோடு கிழக்கு தொகுதியில் 9 வாக்குச்சாவடிகள் பதற்றமானவையாக அறிவிக்கப்பட்டு அங்கு கூடுதல் கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 2,26,433 வாக்காளர்கள்

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதியில் 1லட்சத்து 9 ஆயிரத்து 636 ஆண் வாக்காளர்களும், 1லட்சத்து 16 ஆயிரத்து 760 பெண் வாக்காளர்களும், திருநங்கை வாக்காளர்கள் 37 பேரும் என மொத்தம் 2 லட்சத்து 26 ஆயிரத்து 433 பேர் வாக்காளர்களாக உள்ளனர்.

இடைத்தேர்தலையொட்டி இவர்கள் வாக்களிக்க வசதியாக 53 இடங்களில் 237 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த வாக்குச்சாவடி மையங்களில் மின்சார வசதி, குடிநீர் வசதி உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் மாற்றுத்திறனாளிகள் மற்றும் பொது மக்கள் கூட்ட நெரிசல் இன்றி வாக்களிக்க தேவையான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு, வர்க்குச்சாவடிகள் தயார்படுத்தும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.

## 9 வாக்குச்சாவடி பதற்றமானவை

இந்த நிலையில் ஈரோடு கிழக்கு தொகுதி முழுவதும் அமைக்கப்பட்டுள்ள 237 வாக்குச்சாவடிகளில், 4 இடங்களில் உள்ள 9 வாக்குச்சாவடிகள் பதற்றமானவையாக அறிவிக்கப்பட்டு, அங்கு பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள போலீசாருக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதன்படி பதற்றமான வாக்குச்சாவடிகளில் கூடுதல் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

இதுகுறித்து தேர்தல் பிரிவு அதிகாரிகள் கூறும்போது, ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலுக்காக 237 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதில், வாக்காளர்கள் அதிகம் உள்ள பி.பி.அக்ரஹாரம், ராஜாஜிபுரம், வளையக்கார வீதி, மகாஜன பள்ளி ஆகிய 4 இடங்களில் உள்ள 9 வாக்குச்சாவடிகள் பதற்றமானவையாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இங்கு கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு தீவிரமாக கண்காணிக்கப்படும். மேலும் அங்கு கூடுதல் போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு, அமைதியாக தேர்தல் நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றனர்.

9 Polling booths are identified as vulnerable in Erode East Assembly Constituency.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 16 JAN 2025

தேர்தல் பறக்கும் படையினர் சோதனை:

# காரில் கொண்டு வந்த ரூ.1 லட்சம் பறிமுதல்

ஈரோடு, ஜன.16-

ஈரோட்டில் தேர்தல் பறக்கும் படையினர் நடத்திய சோதனையின் போது ஆவணங்கள் இன்றி காரில் கொண்டு வரப்பட்ட ரூ.1 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டது.

## பறக்கும் படை சோதனை

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளன. எனவே வாக்காளர்களுக்கு பண பட்டுவாடாவை தடுக்கும் வகையில் ரூ.50 ஆயிரம் மற்றும் அதற்கு மேல் ரொக்க பணம் கொண்டு செல்வதுதடை செய்யப்பட்டுள்ளது. அத்தியாவசிய தேவைகளுக்காக ரொக்க பணம் மற்றும் பரிசுப்பொருட்கள் எடுத்துச்செல்லும் போது உரிய ஆவணங்கள் வைத்துக்கொள்ள வேண்டும்.

தேர்தல் பறக்கும் படை, சோதனைச்சாவடி, நிலையான கண்காணிப்பு படையினரின் சோதனையின் போது உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு வரப்படும் ரொக்கபணம், பரிசு பொருட்கள் பறிமுதல் செய்யப்படும். அதன்படி கடந்த 10-ந் தேதி முதல் தினசரி பணம் பறிமுதல் செய்யப்பட்டு வருகிறது. நேற்று காலை வரை ரூ.5 லட்சத்து 52 ஆயிரத்து 860 பறிமுதல் செய்யப்பட்டு இருந்தது. இதில் உரிய ஆவணங்கள் சமர்ப்பித்த நிர்மலா, முஸ்தபா, சண்முகம் ஆகியோரிடம் மொத்தம் ரூ.3 லட்சத்து 30 ஆயிரத்து 860 திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

## ரூ.1 லட்சம் பறிமுதல்

இந்த நிலையில் நேற்று மாலை ஈரோடு கிழக்கு தொகுதி எல்லை பகுதியான பவானி ரோடு சுண்ணாம்பு ஓடை பகுதியில் தேர்தல் பறக்கும் படை அதிகாரி என். சதீஸ்குமார் தலைமையில் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது ஈரோடு நோக்கி வந்த ஒரு காரை நிறுத்தி சோதனையிட்டனர். இதில் அந்த காரில் ரூ.1 லட்சம் சிக்கியது.

விசாரணையில் காரில் பணம் கொண்டு வந்தவர் நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் திருவள்ளுவர் வீதியை சேர்ந்த தபஸ் மந்தல் என்பது தெரிய வந்தது. பணத்தை வங்கியில் செலுத்துவதற்காக கொண்டு வந்ததாக அவர் தெரிவித்தார். ஆனால் உரிய ஆவணங்கள் இல்லை. எனவே பணத்தை பறிமுதல் செய்த பறக்கும்படையினர் ரூ.1 லட்சத்தை ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் செயல்பட்டுவரும் தேர்தல் கட்டுப்பாட்டு அறையில் ஒப்படைத்தனர்.



ஈரோட்டில் பறக்கும் படையினர் பறிமுதல் செய்த ரூ.1 லட்சத்தை தேர்தல் பிரிவு அதிகாரிகளிடம் ஒப்படைத்தபோது எடுத்தபடம்.

Election Flying Squad checking : Rs.1Lakh seized in a car.

Scanned with OKEN Scanner

**தினத்தந்தி** 16 JAN 2025

### இடைத்தேர்தல் பாதுகாப்பு பணிக்கு

# கோவை போலீசார் 160 பேர் ஈரோடு வருகை




போலீசார் தங்கி உள்ள குமலன்குட்டை சமுதாயக்கூடம்.

ஈரோடு, ஜன.16–

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் அடுத்த மாதம் (பிப்ரவரி) 5–ந்தேதி நடைபெற உள்ளது. இதற்காக கிழக்கு தொகுதியில் 53 இடங்களில் மொத்தம் 237 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதையொட்டி தேர்தல் பாதுகாப்பு பணிக்காக 5 கம்பெனி துணை ராணுவ வீரர்கள் கோரி, ஈரோடு மாவட்ட தேர்தல் அதிகாரியும், கலெக்டருமான ராஜகோபால் சுன்கரா விண்ணப்பித்துள்ளார்.

இந்த நிலையில் கோவை மாவட்டம் கோவைப்புதூரில் உள்ள தமிழ்நாடு சிறப்பு காவல் படை 4–ம் அணி (பட்டாலியன்) போலீசார் 160 பேர் நேற்று 2 குழுக்களாக தனி வாகனத்தில் ஈரோடு வந்தனர். அவர்களை ஈரோடு தேர்தல் பிரிவு அதிகாரிகள் வரவேற்றனர். இதைத் தொடர்ந்து கோவையில் இருந்து வந்த போலீசார்கள், ஈரோடு குமலன் குட்டை மற்றும் சூரம்பட்டிவலசு பகுதிகளில் உள்ள சமுதாய கூடத்தில் தங்க வைக்கப்பட்டனர். இன்று (வியாழக்கிழமை) அல்லது நாளை (வெள்ளிக்கிழமை) முதல் இவர்கள் அனைவரும் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர். தேர்தல் முடியும் வரை பட்டாலியன் போலீசார் தொடர்ந்து பாதுகாப்பு பணியில் ஈடுபடுவார்கள் என்றும், மேலும் துணை ராணுவ வீரர்களும் ஓரிரு நாளில் ஈரோடு மாவட்டத்திற்கு வருகை தர உள்ளதாகவும் போலீஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

160 Kovai Police arrived in Erode for the by-election security duty.

Scanned with OKEN Scanner

தினகரன் 16 JAN 2025

ஈரோடு கிழக்கு தொகுதியில்

# பறிமுதல் செய்த ரூ.5.52 லட்சம் திரும்ப ஒப்படைப்பு

ஈரோடு, ஜன. 16: ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலையொட்டி, பறிமுதல் செய்யப்பட்ட ரூ.5.52 லட்சம் ரொக்கத்திற்கு உரிய ஆவணம் சமர்ப்பித்ததால் உரியவர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் பறக்கும் படையினர், 5 பேரிடம் இருந்து, 5.52 லட்சம் ரூபாய் ரொக்கப்பணத்தை உரிய ஆவணங்கள் இல்லாததால் பறிமுதல் செய்து, கருவூலத்தில் செலுத்தி இருந்தனர். அவர்கள் ஐந்து பேரும் உரிய ஆவணங்களை சமர்பித்ததால், மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் கலெக்டர் ராஜகோபால் சுன்கரா உத்தரவுப்படி, அப்பணம் உரியவர்களுக்கு முழுமையாக திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

இதன்படி, நிர்மலா என்பவரிடம், 50,860 ரூபாய், முஸ்தபாவிடம், 1 லட்சம் ரூபாய், சண்முகத்திடம், 1.80 லட்சம் ரூபாய், பப்லு என்பவரிடம், 1.22 லட்சம் ரூபாய், சரவணனிடம், 1 லட்சம் ரூபாய் என அனைவரிடமும் ரொக்கப்பணமாக ஒப்படைக்கப்பட்டது.

**ரூ.1 லட்சம் பறிமுதல்:** ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலையொட்டி, அரசியல் கட்சியினர் வாக்காளர்களுக்கு பணம், பரிசு பொருட்கள் வழங்குவதை தடுக்க தேர்தல் பறக்கும் படை குழுகள், நிலை கண்காணிப்பாளர் குழுக்கள், தொகுதிக்கப்பட்ட இடங்களில் தீவிர வாகனச் சோதனை மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில், கிழக்கு தொகுதிக்குட்பட்ட சுண்ணாம்பு ஓடை பேருந்து நிறுத்தத்தில், தேர்தல் பறக்கும் படையினர் நேற்று மாலை வாகனச் சோதனையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது, அவ்வழியாக வந்த காரை தடுத்து நிறுத்தி போலீசார் சோதனை மேற்கொண்டனர். காரில், ரூ.1 லட்சம் ரொக்கம் இருந்தது. பின்னர், காரை ஓட்டி வந்த நபரிடம் விசாரணை நடத்தினர்.

அந்த நபர், நாமக்கல் மாவட்டம் குமரபாளையம் திருவள்ளுவர் தெருவைச் சேர்ந்த தபஸ் மந்தல் என்பதும், ஈரோட்டில் இருக்கும் தனது மனைவியை பார்க்க வந்ததும் தெரியவந்தது. இருப்பினும், அவர் எடுத்து வந்த பணத்திற்கு உரிய ஆவணங்கள் இல்லை என்பதால், தேர்தல் பறக்கும் படையினர், தபஸ் மந்தலிடம் இருந்த ரூ.1 லட்சத்தை பறிமுதல் செய்து, தேர்தல் கட்டுப்பாட்டு அறை அலுவலர்களிடம் ஒப்படைத்தனர்.

தொடர்ந்து, தேர்தல் நடத்தும் அலுவலரும், மாநகராட்சி ஆணையருமான மனிஷ் உத்தரவின் பேரில், அரசு கருவூலத்தில் ஒப்படைக்கப்பட்டது. இதனையடுத்து, உரிய ஆவணங்களை சமர்பித்து, பணத்தை பெற்றுக்கொள்ளுமாறு, தபஸ் மந்தலிடம் தேர்தல் பிரிவு அதிகாரிகள் அறிவுறுத்தினர்.

The seized amount of Rs.5.52 Lakhs was returned in Erode East Assembly Constituency.

Scanned with OKEN Scanner

தினமணி

16 JAN 2025

ஈரோடு கிழக்கு

# வேட்புமனு தாக்கல் செய்ய நாளை இறுதிநாள்

ஈரோடு, ஜன. 15: ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனு தாக்கல் செய்ய வெள்ளிக்கிழமை (ஜனவரி17) இறுதி நாள். இதுவரை சுயேச்சை வேட்பாளர்கள் 9 பேர் வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர்.

ஈரோடு கிழக்கு தொகுதிக்கான இடைத்தேர்தல் அறிவிப்பு கடந்த 6- ஆம் தேதி வெளியிடப்பட்டு தேர்தலில் போட்டியிடுபவர்கள் கடந்த 10- ஆம் தேதி தொடங்கி 17- ஆம் தேதி வரை வேட்புமனு தாக்கல் செய்யலாம் என அறிவிக்கப்பட்டது. இதில் அரசு விடுமுறை நீங்கலாக ஜனவரி 10, 13, 17 ஆகிய மூன்று நாள்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் வாய்ப்பு இருந்தது.

இதில் கடந்த 10- ஆம் தேதி நடந்த முதல்நாள் வேட்புமனு தாக்கலின்போது சுயேச்சை வேட்பாளர்களான பத்மராஜன், நூர்முகமது, மதுரை விநாயகம் ஆகிய 3 பேர் வேட்புமனு தாக்கல் செய்தனர். இரண்டாவது நாளான கடந்த 13- ஆம் தேதி சுயேச்சை வேட்பாளர்களான ராஜசேகரன், கோபாலகிருஷ்ணன், மேனி, ஆனந்த், முகமது கபீர், இசக்கிமுத்து ஆகிய 6 பேர் என வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர். வேட்புமனு தாக்கல் வெள்ளிக்கிழமை மாலை 3 மணியுடன் நிறைவடைய உள்ளது.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் அதிமுக, பாஜக போட்டியிடவில்லை என அதிகாரபூர்வமாக அறிவித்து விட்டன. இந்நிலையில் நாம் தமிழர் கட்சியின் வேட்பாளர் சீதாலட்சுமி வெள்ளிக்கிழமை காலை 11.30 மணியளவிலும், திமுக வேட்பாளர் வி.சி.சந்திரகுமார் வெள்ளிக்கிழமை பகல் 12.30 மணியளவிலும் வேட்புமனு தாக்கல் செய்ய உள்ளனர். தவிர சுயேச்சை வேட்பாளர்களும் வேட்புமனு தாக்கல் செய்யலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்ந்து 18- ஆம் தேதி வேட்புமனு பரிசீலனை நடைபெற உள்ளது. 20- ஆம் தேதி வேட்புமனு திரும்பப்பெற இறுதி நாளாகும். அன்று பிற்பகல் 3 மணிக்கு இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும் என தேர்தல் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

Tomorrow is the last day for filing nomination in Erode East Assembly Constituency.

Scanned with OKEN Scanner

தினமணி 16 JAN 2025

# ஈரோடு கிழக்கு தொகுதியில் வாக்குசேகரிப்பை தொடங்கிய திமுக



ஈரோடு பெரியார் நகர் பகுதியில் வீடுவீடாக சென்று வாக்குசேகரித்த அமைச்சர் சு.முத்துசாமி, வேட்பாளர் வி.சி.சந்திரகுமார் மற்றும் திமுக நிர்வாகிகள்.

ஈரோடு, ஜன.15: ஈரோடு கிழக்கு தொகுதியில் திமுகவினர் இரண்டாவது நாளாக வீடுவீடாக சென்று வாக்குசேகரிப்பில் ஈடுபட்டனர்.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் வரும் பிப்ரவரி 5- ஆம் தேதி நடைபெறுகிறது. இந்தத் தேர்தலில் திமுக சார்பில் வி.சி.சந்திரகுமார் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார். அதிமுக, பாஜக தேர்தலைப் புறக்கணித்துள்ளன. நாம் தமிழர் கட்சி சார்பில் மா.கி.சீதாலட்சுமி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார். இதனால் ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் திமுகவுக்கும், நாம் தமிழர் கட்சிக்கும் இடையே நேரடி போட்டி ஏற்பட்டுள்ளது.

அமைச்சர் முத்துசாமி தலைமையில் திமுக வேட்பாளர் சந்திரகுமார் மற்றும் கட்சி நிர்வாகிகள், முக்கிய அரசியல் கட்சித் தலைவர்கள், அமைப்பு நிர்வாகிகளை நேரில் சந்தித்து திமுகவுக்கு ஆதரவு திரட்டி வந்தனர். இந்நிலையில் செவ்வாய்க்கிழமை மாலை முதல் திமுகவினர் வாக்குச்சேகரிப்பை தொடங்கியுள்ளனர்.

வீட்டு வசதித் துறை அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில் வேட்பாளர் வி.சி.சந்திரகுமார் மற்றும் நிர்வாகிகள் பெரியார் நகர் பகுதி, கள்ளுக்கடை மேடு, ஓடைப்பள்ளம் ஆகிய பகுதிகளில் வீடுவீடாக சென்று திமுக ஆட்சியில் கொண்டுவரப்பட்ட மக்கள் நலத் திட்டங்களை கூறி வாக்கு சேகரித்தனர்.

அதைத்தொடர்ந்து இரண்டாவது நாளாக புதன்கிழமை காலை 7 மணிக்கு திமுகவினர் வாக்குசேகரிப்பை தொடங்கினர். பெரியார் நகர், எஸ்கேசி சாலை, வாமலை வீதி போன்ற பகுதிகளில் உள்ள ஒவ்வொரு வீடாகச் சென்று திமுகவுக்கு ஆதரவாக வாக்கு சேகரித்தனர்.

கடந்த 2023- ஆம் ஆண்டு நடந்த ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் ஈவிகேஎஸ்.இளங்கோவன் 66 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றார். இந்த முறை ஒரு லட்சத்துக்கும் மேல் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற திட்டமிட்டு பணியாற்றி வருவதாக வேட்பாளர் வி.சி.சந்திரகுமார் தெரிவித்தார்.

வாக்கு சேகரிப்பின்போது அமைச்சருடன் வேட்பாளர் வி.சி.சந்திரகுமார், எம்.பி.க்கள் கே.இ.பிரகாஷ், அந்தியூர் செல்வராஜ், மாநகரச் செயலாளர் சுப்பிரமணியம், மேயர் சு.நாகரத்தினம் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

DMK campaign started in Erode East Assembly Constituency.

Scanned with OKEN Scanner

தமிழ் முரசு 15 JAN 2025

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல்

# இதுவரை 9 சுயேட்சை வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல்

## 17ம் தேதி கடைசி நாள்

ஈரோடு, ஜன. 15-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனு தாக்கல் செய்ய நாளை மறுதினம் கடைசி நாளாகும். இதுவரை சுயேட்சை வேட்பாளர்கள் 9 பேர் வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர்.

ஈரோடு கிழக்கு தொகுதிக்கான இடைத்தேர்தல் கடந்த 6ம் தேதி அறிவிக்கப்பட்டது. கடந்த 10ம் தேதி முதல் வருகிற 17ம் தேதி வரை வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல் செய்யலாம் என தேர்தல் ஆணையம் அறிவித்திருந்தது.

இதில், அரசு விடுமுறை நீங்கலாக 10ம் தேதி, 13ம் தேதி, 17ம் தேதி ஆகிய மூன்று நாட்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்ய வாய்ப்பு இருந்தது. கடந்த 10ம் தேதி நடந்த முதல்நாள் வேட்புமனு தாக்கலின் போது சுயேட்சை வேட்பாளர்களான பத்மராஜன், நூர்முகமது, மதுரை விநாயகம் ஆகிய 3 பேர் மனு தாக்கல் செய்தனர். இதில், நூர்முகமது மட்டும் 2 வேட்பு மனு தாக்கல் செய்திருந்தார். இரண்டாவது நாளான கடந்த 13ம் தேதி சுயேட்சை வேட்பாளர்களான ராஜசேகரன், கோபாலகிருஷ்ணன், மணி, ஆனந்த், முகமதுகபீர், இசக்கிமுத்து ஆகிய 6 பேர் நேற்று முன்தினம் வேட்புமனு தாக்கல் செய்தனர். இதுவரை மொத்தம் 9 பேர் வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர். வேட்புமனு தாக்கல் நாளை மறுதினம் (17ம் தேதி) மாலை 3 மணியுடன் நிறைவடைய உள்ளது.

இந்த இடைத்தேர்தலில் கடந்த 2023ம் ஆண்டு நடந்த இடைத்தேர்தலை போலவே ஆளுங்கட்சியான திமுகவிற்கு வெற்றிவாய்ப்பு அதிகமாக உள்ளது. தமிழகத்தில் நடந்த நாடாளுமன்ற தேர்தலில் எதிர்க்கட்சிகளான, அதிமுக, பாஜ போன்ற கட்சிகள் பெரும் தோல்வியை சந்தித்ததால், ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் தங்களது கட்சி போட்டியிடவில்லை என அதிகாரப்பூர்வமாக அறிவித்து விட்டனர். இந்நிலையில், இந்தியா கூட்டணி சார்பில், திமுக வேட்பாளராக போட்டியிடும் முன்னாள் எம்எல்ஏ சந்திரக்குமார், நாளை மறுதினம் (17ம் தேதி) பகல் 12.30 மணி அளவிலும், நாம் தமிழர் கட்சியின் வேட்பாளராக போட்டியிடும் சீதாலட்சுமி, அன்றைய தினம் காலை 11.30 மணி அளவிலும் வேட்புமனு தாக்கல் செய்ய உள்ளனர். இதுதவிர சுயேட்சை வேட்பாளர்களும் வேட்புமனு தாக்கல் செய்யலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. தொடர்ந்து, 18ம் தேதி வேட்புமனு பரிசீலனை நடைபெற உள்ளது. 20ம் தேதி வேட்புமனு வாபஸ் பெற கடைசி நாளாகும். அன்றைய தினம் மாலை 3 மணிக்கு இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும் என தேர்தல் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

9 Independent candidates filed nomination so far in Erode East Assembly Constituency. January 17 is the last day.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர் 16 JAN 2025

# ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் ரூ.3.33 லட்சம், மதுபானம் பறிமுதல்

ஈரோடு, ஜன. 16-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் பறக்கும் படை அதிகாரிகள், ஆறு பேரிடம் இருந்து பறிமுதல் செய்த ரொக்கப்பணம், மதுபானம் போன்றவற்றில் ஆவணங்களை காண்பித்து ரொக்கத்தை வாங்கி சென்றது தவிர, 3.33 லட்சம் மதிப்பில் ரொக்கப்பணம், மது பானங்கள் உள்ளன.

கடந்த, 7ல், இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டு, ஈரோடு கிழக்கு தொகுதியில் இதுவரை பறக்கும் படையினரால், ஐந்து லட்சத்து, 52 ஆயிரத்து, 860 ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டது. இதில் சண்முகம், 1.80 லட்சம் ரூபாய், முஸ்தபா, ஒரு லட்சம் ரூபாய் உள்பட ஐந்து பேருக்கு, மூன்று லட்சத்து, 30 ஆயிரத்து, 860 ரூபாய் உரிய ஆவணங்களின் அடிப்படையில் திரும்ப வழங்கி விட்டனர். மீதமுள்ள நபருக்கான தொகை, 2.20 லட்சம் ரூபாய், கருவூலத்தில் செலுத்தி வைத்துள்ளனர். மேலும், 9,556 ரூபாய் மதிப்பில், 14.22 லிட்டர் மதுபானம், 1,500 மதிப்புள்ள போதை பொருள் பறிமுதல் செய்துள்ளனர். மொத்தம், இரண்டு லட்சத்து, 33 ஆயிரத்து, 56 ரூபாய் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

நாமக்கல் மாவட்டம், குமாரபாளையத்தை சேர்ந்த திருவள்ளுவர் தெருவை சேர்ந்த தபஸ்மந்தல் என்பவர் குடும்பத்துடன், ஈரோடு சுண்ணாம்பு ஓடை பகுதியில் காரில் வந்தார். அவரது காரை தணிக்கை செய்தபோது, ஆவணங்கள் இன்றி, ஒரு லட்சம் ரூபாய் இருந்ததால், அத்தொகையை பறிமுதல் செய்து, கருவூலத்தில் செலுத்தினர்.

★தேர்தலை அமைதியாக நடத்தி முடிக்கும் வகையில், பாதுகாப்பு பணிகளை கண்காணிக்க, தெலுங்கானா மாநிலத்தை சேர்ந்த ஐ.பி.எஸ்., அதிகாரி சந்தனா தீப்தி நியமிக்கப்பட்டுள்ளார்.

Erode East Assembly Constituency:
Rs.3.33 Lakhs and Liquor seized.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர் 16 JAN 2025

# பறிமுதலான ரூ.5.52 லட்சம் திரும்ப வழங்கல்

**ஈரோடு, ஜன. 15-**

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் பறக்கும் படையினர், 5 பேரிடம் இருந்து, 5.52 லட்சம் ரூபாய் ரொக்கப்பணத்தை உரிய ஆவணங்கள் இல்லாததால் பறிமுதல் செய்து, கருவூலத்தில் செலுத்தி இருந்தனர்.

அவர்கள் ஐந்து பேரும் உரிய ஆவணங்களை சமர்பித்ததால், மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் கலெக்டர் ராஜகோபால் சுன்கரா உத்தரவுப்படி, அப்பணம் உரியவர்களுக்கு முழுமையாக திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

இதன்படி, நிர்மலா என்பவரிடம், 50,860 ரூபாய், முஸ்தபாவிடம், 1 லட்சம் ரூபாய், சண்முகத்திடம், 1.80 லட்சம் ரூபாய், பப்லு என்பவரிடம், 1.22 லட்சம் ரூபாய், சரவணனிடம், 1 லட்சம் ரூபாய் என அனைவரிடமும் ரொக்கப்பணமாக ஒப்படைக்கப்பட்டது.

The seized amount of Rs.5.52 Lakhs was returned.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர்

1 6 JAN 2025

# ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல் பாதுகாப்பு பணியில் போலீசார்

**ஈரோடு, ஜன. 16-**

இடைத்தேர்தல் பாதுகாப்பு பணிக்கு, 160 பட்டாலியன் போலீசார் ஈரோடு வந்துள்ளனர்.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் வேட்புமனு தாக்கல் நாளை (17ல்) நிறைவு பெறுகிறது. தி.மு.க., ஏற்கனவே தேர்தல் பிரசாரத்தை துவக்கி விட்டது. நாம் தமிழர் கட்சியினர், 17க்கு பின் பிரசாரத்தை துவக்குவர் என தெரிகிறது. வேட்புமனுக்களை திரும்ப பெறுவதற்கான கடைசி நாள் 20ம் தேதி. அதன் பின்னரே சுயேட்சைகளும் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவர். இந்நிலையில் தேர்தல் பிரசாரம், வேட்புமனு தாக்கலின்போது, சட்டம் ஒழுங்கு பிரச்னை ஏற்படாமல் இருக்க கூடுதல் போலீசார் நியமிக்கப்பட்டுள்ளனர்.

போலீஸ் அதிகாரிகள் கூறுகையில்,' கோவை மாவட்டம், கோவை புதூரில் இருந்து 160 பட்டாலியன் போலீசார் ஈரோடு வந்துள்ளனர். குமலன் குட்டை, சூரம்பட்டி வலசு பகுதிகளில் உள்ள சமுதாய கூடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இன்று முதல் இவர்கள், பாதுகாப்பு பணிக்கு பயன்படுத்தி கொள்ளப்படுவர்,' என்றனர்.

160 Police on election Security duty in Erode East Assembly Constituency.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர் 15 JAN 2025

# அமைச்சர் வீட்டின் அருகில் தொடங்கிய தி.மு.க., பிரசாரம்

ஈரோடு, ஜன. 15-

ஈரோட்டில் தி.மு.க.,வின் இடைத்தேர்தல் பிரசாரம், அமைச்சர் வீட்டின் அருகில் தொடங்கியது.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க., வேட்பாளர் சந்திரகுமாரை ஆதரித்து, ஈரோடு பெரியார் நகரில் உள்ள, வீட்டு வசதித்துறை அமைச்சர் முத்துசாமி வீட்டருகே, பிரசாரத்தை நேற்று தொடங்கினர். பெரியார் நகரில் வீட்டு வீடாக ஓட்டு சேகரித்த அமைச்சர் முத்துசாமி கூறியதாவது:

முதல்வர் ஸ்டாலின் பெண்களுக்கு வழங்கிய திட்ட பயன்களால், தி.மு.க.,வுக்கு ஓட்டுப்போட மக்கள் விரும்புகின்றனர்.

கொடுத்த வாக்குறுதிகளை முதல்வர் முழுமையாக நிறைவேற்றி உள்ளார். நாம் தமிழர் கட்சி வேட்பாளர் அறிவிக்கப்பட்டுள்ளார். அவர்களை சாதாரணமாக பார்க்கவில்லை. போட்டியாகவே பார்த்து பணி செய்கிறோம்.

இவ்வாறு அமைச்சர் கூறினார்.

அமைச்சருடன் வேட்பாளர் சந்திரகுமார், எம்.பி.,க்கள் பிரகாஷ், அந்தியூர் செல்வராஜ், முன்னாள் எம்.பி., கந்தசாமி மற்றும் பலர் பங்கேற்றனர்.



■ ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில், தி.மு.க., வேட்பாளரை ஆதரித்து, அமைச்சர் முத்துசாமி பெரியார் நகரில், நேற்று வீடு வீடாக ஓட்டு சேகரித்தார்.

DMK campaign started nearer from Minister’s house.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர் 16 JAN 2025

# ஈரோடு கிழக்கு தொகுதியில் பதட்டமான 9 ஓட்டுச்சாவடி

ஈரோடு, ஜன. 16–

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில், ஒன்பது ஓட்டுச்சாவடிகள் பதட்டமானவையாக கண்டறியப்பட்டுள்ளது.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் பிப்.,5ல் நடக்கிறது. தொகுதியில், ஒரு லட்சத்து 9,636 ஆண் வாக்காளர்களும், ஒரு லட்சத்து, 16 ஆயிரத்து, 760 பெண் வாக்காளர்களும், மூன்றாம் பாலினத்தவர்கள், 37 பேர் என மொத்தம், இரண்டு லட்சத்து, 26 ஆயிரத்து, 433 பேர் வாக்காளர்களாக உள்ளனர். ஆண்களை விட, பெண் வாக்காளர்கள் அதிகம். வாக்களிக்க வசதியாக, 53 இடங்களில், 237 ஓட்டுச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

ஓட்டுச்சாவடி மையங்களில் மின்சாரம், அடிப்படை வசதி, மாற்றுத்திறனாளிகள் மற்றும் மக்கள் கூட்ட நெரிசலின்றி வாக்களிக்க தேவையான, அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு, தயார்ப்படுத்தும் பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. கிழக்கு தொகுதி முழுவதும் அமைக்கப்பட்ட, 237 ஓட்டுச்சாவடிகளில், நான்கு இடங்களில் உள்ள ஒன்பது ஓட்டுச்சாவடிகள் பதட்டமானவையாக அறிவிக்கப்பட்டு, அங்கு பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள போலீசாருக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, தேர்தல் பிரிவு போலீஸ் அதிகாரிகள் கூறியதாவது: ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலுக்காக, 237 ஓட்டுச்சாவடிகள் தேர்தல் கமிஷனால் அமைக்கப்பட்டுள்ளன. அதில், மக்கள் தொகை அதிகம் உள்ள பி.பெ.அக்ரஹாரம், ராஜாஜிபுரம், வளையக்கார வீதி, மகாஜன பள்ளி பகுதி ஆகிய நான்கு இடங்களில், ஒன்பது ஓட்டுச்சாவடிகள் பதட்டமானவையாக கண்டறியப்பட்டுள்ளது. அங்கு 'சிசிடிவி' கேமரா மூலம் கண்காணிப்பு செய்யப்படும். கூடுதல் போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு, அமைதியாக தேர்தல் நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறு கூறினர்.

9 Polling booths are identified as vulnerable in Erode East Assembly Constituency.

Scanned with OKEN Scanner